முருகப்பெருமான் துணை

**மகான் அதிபத்த நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

28.01.2023, சனிக்கிழமை

1. வானவர் போற்றும் வள்ளலே
வையகம் எங்கும் சைவநெறி
ஞானமாகத் தழைக்க அருள்செய்யும்
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே ஞானிகளை தொடர்ந்து
அறுபத்து மூவரான நாயன்மார்களும்
வரங்களாக அனுகூல ஆசிதனை
வழங்குவோம் இனிமேல் தொடர்ந்து
3. தொடர்ந்திட சுபகிருது கலை திங்கள்
தேசிகனுக்கு முன்னான்கீர்திகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 14 ம் நாள் 28.01.2023, சனிக்கிழமை)
தடையற அனுகூல ஆசிதனை
தக்கபடி அதிபத்த நாயன்மார் யானும்
4. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான சைவ நெறிமுறைதனை
ஞானமாக மக்களிடை பரப்பிட
ஞானவான்களாக மக்களெல்லாம் தேறி
5. தேறியே ஜீவத் தயவு எனும்
தெய்வப் பலமாக ஆற்றலதும்
மாறியே மனிதர்கள் அனைவரும்
மகான்களாக ஏற்றம் அடைவர்
6. அடையவே ஞானிகள் படையே
அரங்கனுள் கலந்து அருள
தடையற பிரணவக் குடிலை
தரணியோர் கண்டு அனுகி
7. அனுகியே அரங்கன் கரம்பட
ஆறுமுகனார் சடாட்சர தீட்சை
ஞானமாக ஏற்றுப் பணிந்து
நாளும் செபதபம் செய்துவர
8. வருகவே பொறிபுலன் வழி
வதையான செயல்பாடில்லா
தரும சிந்தைபட சைவ நெறி
தானாக வசமாகி அகலா வண்ணம்
9. வண்ணமுடன் செயல்பாடுகண்டு
வாழும் காலமே ஞானிகளை
எண்ணம்வழி ஸ்பரிசமாகவும்
இனிதே சயனவழி காட்சியாகவும்

10. ஆகவே அடைந்து அறிந்து
அற்புதம் தனை உணர்ந்துமே
செகமதனில் ஞானவான்களாகி
சித்திகளும் சூட்சுமமாய் அடைவர்

11. அடையவே ஞானத் தலைமையை
அகிலத்தில் தேர்ந்தெடுக்கும் வல்லமை
தடையறக் கண்டு உலகினில்
தனிப்பெரும் ஞான ஆட்சி படைப்பர்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–